**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.18/2025 நாள்- 29.07.2026

**வா.சா.1 கவிதா**

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்**

நான் ஆசிலாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு எழுதப்படிக்கத் தெரியும். எனக்கு 2 பெண்மக்களும், 1 ஆண் மகனும் இருக்கிறார்கள். என் பிள்ளைகள் திருமணமாகி தனித்தனியாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் கணவர் 2017 ம் ஆண்டு இறந்துவிட்டார். நான் எந்த வேலைக்கும் செல்லவில்லை வீட்டில் வேலையில்லாமல் இருந்து வருகிறேன் பிரதிவாதி எனக்கு உறவினர். பிரதிவாதி 20.02.2022 அன்று கடன் வாங்கினார். பிராது மற்றும் நிரூபணவாக்குமூலத்திற்கான விவரங்களை என் வழக்கறிஞருக்கு நான்தான் தகவல் கூறினேன். எனது மூத்த மகளின் கணவர் பெயர் பரமகுரு என்றால் சரிதான். என் மூத்த மகள் கணவர் கொடுக்கும் பணத்தில் தான் நான் என்னை பராமரித்து வருகிறேன் என்று சொன்னால் என் மகன் கொடுக்கும் பணத்தில் தான் என்னை பராமரித்து கொள்கிறேன் என் மகன் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார். என் மகன் எனக்கு அவ்வபோது ரூ.50000/-, ரூ.1லட்சம் என்றும் பணம் அனுப்புவார். பிரதிவாதிக்கு 20.02.2022 அன்று பணம் கொடுக்கும் போது என் தம்பி செல்வகுமார் உடன் இருந்தார். இந்த விவரத்தை என் தம்பி செல்வகுமார் முன்பாக பணம் கொடுத்தாக பிராது மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் கூறவில்லை. என் தம்பி செல்வகுமார் கடனுறுதிசீட்டில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். கடனுறுதிசீட்டை என் தம்பி செல்வகுமார் 20.02.2022 அன்று எழுதினார். பணம்கொடுத்த அன்றே கடனுறுதிசீட்டை எழுதி வாங்கிவிட்டேன். பிரதிவாதியிடம் எந்த தேதியில் பணத்தை கேட்டேன் என்று தேதி ஞாபகம் இல்லை. கடனுறுதிசீட்டிற்குரிய பணத்தை பிரதிவாதி திருப்பி கொடுக்கவில்லை என்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை. பிரதிவாதிக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. உண்மையிலேயே நான் பணம் கொடுத்திருந்தால் பணத்தை திருப்பி கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. பணம் கொடுக்க வேண்டும் என்றுவேறு நபர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. கடனுறுதிசீட்டில் மாரிமுத்து,

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

பாலசுப்பிரமணியன் ஆகியோர்கள் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள். பிரதிவாதிக்கு ரொக்கமாகத்தான் பணம் கொடுத்தேன். பிரதிவாதிகள் என் மருமகன் பரமகுருவிடம் காலியிடத்தின் அசல் ஆவணங்களை வைப்பீடு செய்து பூர்த்தி செய்யப்படாத கடனுறுதிசீட்டில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் நான் பணம் கொடுத்த பின்பு தான் எனக்கு தெரியும். பிரதிவாதிகள் என் மருமகனிடம் பணத்தை கொடுத்த பின்பு அசல் ஆவணம் மற்றும் கடனுறுதிசீட்டை திருப்பி கொடுக்காமல் ஏமாற்றி வரும் விவரம் எனக்கு தெரியாது. ரூ.550000/-பிரதிவாதிகள் கொடுக்கவில்லை என்று காவல் நிலையத்தில் என் மருமகன் புகார் கொடுத்த விவரம் பின்னாள் கேட்டு தெரிந்து கொண்டேன். பிரதிவாதிகள் காவல் நிலைய விசாரணையின் போது முதலில் ரூ.50000/-மும் பின்பும் 3 தவணைகளாக பணத்தை கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது என் மருமகன் அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். என் மருமகனிடம் கொடுத்த கடனுறுதிசீட்டை மோசடியாக என் பெயருக்கு பூர்த்தி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், என் மருமகனிடம் பெற்ற கடனை பிரதிவாதிகள் அடைத்துவிட்டார்கள் என்றும் எனக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வேலையோ வருமான வாய்ப்போ இல்லை என்றும், எனக்கும் வருமானம் உள்ளது என்று காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும், பிரதிவாதிகள் என்னிடம் ஒருபோதும் கடன் வாங்கியதில்லை என்றும் அதற்கு ஆதரவாக எனக்கு கடனுறுதிசீட்டு எழுதிக் கொடுத்ததில்லை என்றும் நான் கூறும் சாட்சிகள் வா.சா.ஆ.1-ல் கையொப்பம் செய்யவில்லை என்றும், வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டு மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல என் தம்பி செல்வகுமாரின் சொந்த ஊர் கோவில்பட்டி. என் மருமகனின் தூண்டுதலின் பெயரில் என் மருமகன் திருப்பி கொடுக்காத கடனுறுதிசீட்டை என் பெயருக்கு பூர்த்தி செய்து கூடுதல் பணம் பறிக்க வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.